# பூசம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ பூசம் சக்தி**

பரவியோமம், பரம ஜோதிமயம், விபுலம்,

பரம்பரம், அனந்தம், அசலம்.

**3. திருப்பாவைபாசுரம் – 26 பூசம் இயல்பு**

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்

மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்

ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன

பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சன்னியமே

போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே

சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே

கோல விளக்கே கொடியே விதானமே

ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/Xe0olbXJY_c**

**விளக்கம் :**

கோல விளக்கே பரம ஜோதி மயமாகும். கொடியே விநோதமான பரவியோமமாகும். அகிலமே பாலன்ன வண்ணத்து பாஞ்ச சன்னியமாகும்.

சாலப் பெரும்பறையே பரம்பரம் ஆகும். ஆனந்தமே ஆலின் இலையில் எளிய அருளாகும். ஞாலத்தையெல்லாம் நடுங்க வைக்கும் விபுலமே சன்மார்க்க சங்கங்களாகும்.

புருவமத்தியில் பூசமானது அருட்பெருஞ்ஜோதியாக விளங்க வேண்டும். அதை அறிவிக்கவே சங்குகள் வேண்டும். மேலும் சங்கத்தில் சன்மார்க்கம் முறைப்படி தீபங்கள் ஏற்றப்பட வேண்டும். சன்மார்க்க கொடி பறக்க வேண்டும். நடவடிக்கைகள் பனிவிடாமல் அணையா அடுப்பு வேண்டும்.

அன்னதானம் வேண்டும். அலங்கார சோறு வேண்டும். ஆலிலையில் அருளும் வேண்டும். உலகமே வியக்க வேண்டும். எதிரிகளும் பாராட்ட வேண்டும். ஏழுதிரைகள் நீக்க வேண்டும். அருட்பெருஞ்ஜோதி காண வேண்டும். கண்ணா கருநீல வண்ணா என தொடங்கி மாலே மணிவண்ணா என்ற உன் தரிசனம் ஆகும். பெருஞ்ஜோதியாய் ஆலிலையில் செயற்படுங் கருணையாய் எல்லோரும் பெற வேண்டும். ஆனால் அது பூசத்திற்கே சொந்தம். எனவே,

ஞாலத்தை எல்லாம் நடுங்கவைக்கும் பாலன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே, அருட்பெருஞ்ஜோதியாகும். பல்வேறு சங்கங்கள் பலப்பல போய்பாடு உடையவைகள், இருந்தாலும் சமரச சுத்த சன்மார்க்க சங்கம். சாலப்பெரும் பறையாக கொடிய விதனமாக கோல விளக்காக, ஒளிர்க்கச் செய்வதே அருட்பெருஞ்ஜோதியாகும். இந்த பூச ஜோதி பரம்பரையாக பாரம்பரியமாக, ஏழேழு பிறப்பிற்குப் பின் கிடைக்கும் நக்ஷத்ரமாகும். இவர்கள் அசலானவர்கள். இவர்களுடைய மூலக் கூறுகள் (Originality) வியப்பிற்குரியவை.

மேலும் அடிமுடி காணாத அளவிற்கு ஆனந்தமாக திகழ்பவர்கள். புரட்சி சிந்தனையாளர்கள், ஐம்புலன் இச்சைகளை வித்தியாசமான வழியில் வெல்லத் தகுந்தவர்கள். சிறுக கட்டி பெருக வாழ ஆலின் இலையிலே அருளும் கண்ணன் கருநீல வண்ணன் இவர்களே யாவர். பூசமே வருக! பூசமே அருள்க!

## 4. வேதத்தில் பூசம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ப்ரம்வர்ச்சஸாய வித்மஹே
மஹா திஷ்யாய தீமஹி
அபயங் க்ருணுதாம் தீமஹி
ஜோதி புஷ்ப ப்ரசோதயாத்

பிறப்பெடுத்தாலும் பரலோகம்
சிறப்புடன் அடைய வழி கொடுக்கும்
முடிவில்லா நிலையினிலே
முன்னிலை தருவாய் நமோ நமோ

உலகம் தோன்றிய நாள்முதலாய்
உயர்வாய் உந்தன் நிலை இருக்கும்
ஜோதி மயம் உன் தனிக் கருணை
ஆதியானவா நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. பூசம் கவிதை

நான் உயர உயர போகிறேன் நீயும் வசி வசி
நான் ஜோதி மயமாய் உயர்கிறேன் நீயும் ஒளிர், ஒளிர்
நான் முடிவில்லாமல் வளர்கிறேன் நீயும் வளர், வளர்
நான் சனிகரைந்து நேசிக்கிறேன் நீயும் புசி, புசி

அருட்பெருஞ்ஜோதியா? அருள் பெருஞ்ஜோதியா?
அருள்  பெறும் ஜோதியா? அருள் தரும் ஜோதியா?
ஆசை போது மென்றால் அன்பு தருமமாகும் ஜோதி நீ
அன்பு தருமமான பின் அனைத்தும் செயல்படுங் கருணையே!

பூசமே, பாசமே, பூசலே இல்லாத நேசமே
பூசிய சிரிப்பு – வீசிய விளைவு – ஏசிய இயற்கை
பூரணமான பணியே, புகழ் பேசும் சூழ் நட்பே
பூட்டிய அடிப்படைகளில் கூடவே பேசி பூட்டாத பூச்சரடே

எல்லையிலாத அனந்த நாராயணனே நீ தானே!
கவலையிலாத அசலான கிருஷ்ணனே நீ தானே!
உருவமிலாத அருவமே! சிவசக்தி நீ தானோ?
கேட்டவரங் கொடுக்கும் பரபிரம்மம் நீ தானோ?

சுயமாக ஒளிவிடுவதில், வழிவிடுவதில் அசல் நீ!
சுவையான தேன் தானுங் கெடாமல், காக்கும் அயல் நீ!
சுரமான கீதங்களில், வளமான மேல் நோக்கிய வயல் நீ!
சுண்டிவிட்டாலும் கீழே விழாமல் உயரும் உயிர் நீ!

பூசமே புருஷலட்சணம் – தான் உண்டு தரமும் உண்டு.
நேசமே பூசலட்சணம் – நட்புண்டு நலமும் உண்டு
வாசமே ஆன்மலட்சணம் – ஞானமுண்டு மோட்சமும் உண்டு.
வம்சமே வாழ்வின் லட்சணம் – உறுதி உண்டு அட்சயமும் உண்டு

## 6. அபிராமி அந்தாதியில் பூசம் சக்தி

**எல்லா சித்திகளும் அடைய**

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்

பராசக்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்

முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முறைத்தெழுந்த

புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

**அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க**

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய்; கொண்டதல்ல என்கை

நன்றே உனக்கு இனி நான் என்செயினும்; நடுக்கடலுள்

சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே;

ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!

**மறுமையில் இன்பம் உண்டாக**

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு

எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி எண்ணுதற்குச்

சமையங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை;

அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

**துர்மரணம் வராமலிருக்க**

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்

பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்

வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட

நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பூசம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ஸுபுஜாய நம – சுபங்களின் உலகியலே போற்றி

ஓம் துர்த்தராய நம – வையகத்தை உதித்தவனே போற்றி

ஓம் வாக்மிநே நம – வேத விதிகளின் வெளியீடே போற்றி

ஓம் மஹேந்த்ராய நம – உலகையாளும் இந்திரனே போற்றி

ஓம் வஸுதாய நம – பொருளுடையோரின் ஆசியே போற்றி

ஓம் வஸவே நம – பொருளே, பொன்னே போற்றி

ஓம் நைகரூபாய நம – ஆதி அந்தமில்லா ஜோதியே போற்றி

ஓம் ப்ருஹத்ரூபாய நம – கற்பனைக்கெட்டா அவதாரமே போற்றி

ஓம் ஸிபிவிஷ்டாய நம – பசுவின்தியாக மாற்றமே போற்றி

ஓம் ப்ரகாஸாய நம – பிரகாச பிழம்பே போற்றி

ஓம் ஓஜஸ்தேஜோ த்யுதிதராய நம – அறிவு, செறிவு, ஆற்றலே போற்றி

ஓம் ப்ரகாஸாத்மநே நம – பிரகாச ஆத்மாவே போற்றி

ஓம் ப்ரதாபநாய நம – ஆக்கபூர்வ சூரியனே போற்றி

ஓம் ருத்தாய நம – ஆராய்ச்சி ஞானவானே போற்றி

ஓம் ஸ்பஷ்டாக்ஷராய நம – மகாமந்திர அக்ஷரமே போற்றி

ஓம் மந்த்ராய நம – அருட்பெருஞ்ஜோதியே போற்றி

ஓம் சந்த்ராம்ஸவே நம – சம்சார சந்திர மாற்றமே போற்றி

ஓம் பாஸ்கரத்யுதயே நம – சூர்யவெப்ப சலன தாக்கமே போற்றி

ஓம் அம்ருதாம்ஸுத் பவாய நம – அமிர்தம் அளிப்பவளே போற்றி

ஓம் பாநவே நம – அகப்பெருஞ்ஜோதியே போற்றி

ஓம் ஸஸபிந்தவே நம – அளவிலா ரகசிய நிலவே போற்றி

ஓம் ஸுரேஸ்வராய நம – தேவர்களுக்கு அருள்பவனே போற்றி

ஓம் ஔஷதாய நம – சம்சார சாஹரத்தில் தீர்வளிக்கும் ஓடதமே போற்றி

ஓம் ஜகத: ஸேதவே நம – உலகிய பிரச்சனைகளை கடக்கும் தோணியே போற்றி

ஓம் ஸதத்ய தர்ம – பாரக்ரமாய நம – சத்ய, தர்ம கைங்கர்யங்களின் விஸ்வரூபமே போற்றி

| | |
|---|---|
| ஓம் புதபவ்ய பவந்நாதாய நம | – முக்கால விளைவுகளை அறிந்தவனே போற்றி |
| ஓம் பவநாய நம | – தூய்மைபடுத்தும் சாதனமே போற்றி |
| ஓம் பாவநாய நம | – இயக்கத்தின் ஆளுமையே போற்றி |
| ஓம் அநலாய நம | – ஜீவனின் பிராணனே போற்றி |
| ஓம் காமக்நே நம | – ஆசைகளை ஆட்சி செய்பவனே போற்றி |
| ஓம் காமக்ருதே நம | – தூய ஆத்மாக்களின் துணைவனே போற்றி |
| ஓம் காந்தாய நம | – அழகு பணியின் உறைவிடமே போற்றி |
| ஓம் காமாய நம | – உயர்பாதையில் உயர் பதவி அடைபவனே போற்றி |
| ஓம் காமப்ரதாய நம | – நம்பியவருக்கு நாராயணனே போற்றி |
| ஓம் ப்ரபவே நம | – பிரபுவாய் இருந்து பிரபாவம் செய்பவனே போற்றி |

## **8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பூசம் சக்தி**

சாங்கரீ ஸ்ரீகரி ஸாத்வீசரச்சந்த்ர நிபாநநா

சதோதரீ சாந்திமதீ நிராதாரா நிரஞ்ஜனா

நிர்லேபா நிர்மலா நித்யா நிராகாரா நிராகுலா

நிர்குணா நிஷ்கலாசாந்தா நிஷ்காமா நிருபப்லவா

நித்யமுக்தா நிர்விகாரா விஷ்ப்ரபஞ்சா நிராச்ரயா

நித்யசுத்தா நித்யபுத்தா நிரவத்யா நிரந்தரா

நிஷ்காரணா நிஷ்கலங்கா நிருபாதிர் நிரீச்வரா

நீராகாராகமதனீ நிர்மதாமரநாசினீ

நிச்சிந்தா நிரஹங்காரா நிர்மோஹாமோஹநாசினீ

நிர்மமாமமதாஹந்த்ரீ நிஷ்பாபாபாபநாசினீ

நிஷ்க்ரோதாக்ரோதசமனீ நிர்போலோநாசினீ

நிஸ்ஸம்சயா ஸம்சயக்னீ நிர்ப்பவாபவநாசினீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் பூசம் சக்தி

ஆறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்

என் அஹங்காரமும் அகற்றி அறிவொளியாய் இருந்தும்

முருகா எனைக் காக்க வேல் கொண்டு வந்திடுவீர்

பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே

ஓம் ஸௌம் சரவணபவ ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்றும்

க்லௌம் ஸௌம் நமஹவென்று சேர்ந்திடடா நாள்தோறும்

ஓமிருந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திடடா

ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி

ஒருமனத் தோடு நீ உருவையும் ஏத்திடடா

முருகனின் மூலமிது முழுமனத்தோடு ஏத்திட்டால்

மும்மலம் அகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்

முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்ல வேண்டாம்

முருகன் இருப்பிடமே முக்தித் தலம் ஆகுமப்பா

ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே

இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு

மூலமதை ஏத்துவோர்க்குக் காலபயம் இல்லையடா

காலனை நீ ஜயிக்க ஸ்கந்தனைப் பற்றிடடா

சொன்னபடிச் செய்தால் ஸூப்ரஹ்மண்ய குருநாதன்

தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்

ஜெகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே

மூலத்தை நீ ஜபித்தே முக்தனுமாகிடடா

அக்ஷரலக்ஷ்மிதை அன்புடன் ஜபித்துவிடில்

எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்

மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்

பூவுலகில் இணையற்ற பூஜ்யனுமாவாய் நீ

கோடித்தரம் ஜபித்துக்கோடி காணவேண்டுமப்பா

கோடிகாணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே

ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே

வேதாந்த ரகசியமும் வெளியாகும் முன்னுள்ளே

வேதசூக்குமத்தை விரைவாகப் பற்றிடலாம்

ஸூப்ரஹ்மண்ய குருஜோதியாயுள் தோன்றிடுவான்

அருட் பெருஞ்ஜோதியான் ஆறுமுக ஸ்வாமியுமே

அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் ஸத்தியமாய்

ஸித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி பூசம் சக்தி

முருகன், குமரன், குகன், என்று மொழிந்து

உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்

பொரு புங்கவரும், புவியும் பரவும்

குருபுங்கவ, எண் குண பஞ்சரனே.(15)

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு

ஓரா வினையேன் உழலத் தகுமோ?

வீரா, முது சூர் பட வேல் எறியும்

சூரா, சுர லோக துரந்தரனே.(16)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் பூசம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ஜங்காரத்வனி | நட்டபைரவி | கீரவாணி | ஹரஹர பிரியா |

## 12. மூலமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி...அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை...அருட்பெருஞ்ஜோதி

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| அரசு | ஆச்சா | இருள் | நொச்சி |

## 14. பரிகாரம்

- கழுதைக்கு உணவிடவும்.
- வீட்டில் பூச்செடி நடவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.

- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).

- நட்சத்திர கோயில் **அருள்மிகு அட்சயபுரீஸ்வரர் திருக்கோயில்,** விளங்குளம் - பட்டுக்கோட்டை


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra